REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. $1\frac{1}{2}$

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25	கும்பகோணம் விக்ரம- ஹூ கார்த்திகை மீ 13உ 1940-ஹூ நவம்பர்-மீ 28உ	லல-46

வாரக்குறிப்புகள்

ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா

யார் முன்னே வருவார்? நமது நாட்டிலே சிறந்த பண்டித ரத்னங்கள் மறைந்தபின் அவருக்கேற்ற ஞாபகச்சின்னம் ஏற்படுத்த எவரும் முன்வராதது வருந்தத்தக்கது! வேண்டாதவருக்கெல்லாம் தடபுடல் நடக்கிறது! காலம்!!

சரிதமேனும் எழுதுக!! பாஷ்ய பாவக்ஞர் கவிரத்நம், ம. ம. சாஸ்திர ரத்னம் ஆகியவர் ஸ்ரீமடத்தில் ஸம்பந்தமுள்ளவர். உத்தமதர்ம ப்ரசாரகர். அவர்கள் ஸந்ததியாரோ, சிஷ்யர்களோ, அபிமானிகளோ அஜாக்கிரதையாக இல்லாமல் அவர் சரிதத்தை புத்தகமாக அல்லது பத்ரிகையில் வெளியிடல் அவச்யமாகும்.

தார்மிகரின் முயற்சி!! ஸ்ரீமான் அழகப்ப செட்டியாரின் நன் முயற்சியால் நல்ல உத்தம அருணசல க்ஷேத்ரத்தில் நல்ல- கிருத்திகோத்ஸவ காலத்தில் வ. ஸ்வராஜ்ய ஸபை நடப்பது தமிழ் மக்கள் பாக்யமேயாகும். இவரே கிருப்பை எடுத்துவிட்டு சாப்பிடுங்கள் என அன்ன ஸத்திரத்தில் ஏற்பாடு செய்த ஆசாரப்ரியர்!

தக்க ஏற்பாடு வேண்டும்!! ஸ்ரீமான் செட்டியார் அறிவாளி! செல்வாக்குள்ளவர்! கோவிலிலேயே ஸபையை நடத்துகிறார். மானேஜர் பரம ஆஸ்திக சிகாமணி! பல காரணங்களால் வர்ணாச்ரமத்தின் பெருமையை அறியாத சிலர் இதை வெறுப்பர்.

திரண்டு வருக!! அருணசலத்தை ஸ்மரித்தாலே முக்தி என்கிறது புராணம். கிருத்திகோத்ஸவம் அவசியம் தர்சிக்கவேண்டிய உத்தம புண்யமளிக்கும் காலம்.

இருவர் செயலும் வீண்!! நாளுக்கு நாள் யுத்த எதிர்ப்பாளர் கைதியாதல் அதிகமாகி வருகிறது. எதிர்ப்பினால் யுத்த ஸஹாயம் குறையப்போவதில்லை! கைதி செய்வதால் இயக்கம் ஓயப்போவதில்லை! ஸமரஸ ஸமாதானம் தேவை.

பெருந்தன்மை! பம்பாய் கவர்னர் ஸத்யாக்ரஹம் செய்து சிறைக்கு வந்த மந்திரிக்கு எல்லா மரியாதையும் நடத்த உத்திரவிட்டார்.

எதிர்பார்த்த கஷ்டம்!! ஸத்யாக்ரஹம் துராக்ரஹத்தில் முடியுமோ என அஞ்சுகிறோம். அண்ணமலை ஸர்வகலாசாலை மாணவர் போலீஸாரிடம் மண்உண்டை கல்களை எறிந்து நடந்த விதம் கேவலமானது.

எங்கும் பரவுமா! ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் உபதேசத்தால் முடிகொண்டான் முதலிய இடங்களில் உபநயநமானவர் ஆங்கிலத்தை விட்டு அத்யயநம் செய்கின்றனர். இது பரவில் உலகக்ஷேமம்.

ஸ்திரீ சொத்து சட்டம்! டில்லி சபையில் ஷை மசோதா வந்தது. அரசாங்கத்தின்-இந்தியப்ரபல வக்கீல்களைக் கொண்டு நன்றாக விசாரிக்க வேண்டும் என்ற—பதில் கொண்டாடத் தக்கது. முடியு [illegible]

தநுர்மாத பாராயணத்திற்கு வரும்! ஸ்ரீபகவத் கீதாஸாரமும் பத்ம புராண கதைகளும் என்ற நூல் பற்பல அரிய விஷயங்களுடன் விரைவில் வெளிவரும். தநுர்மாத ஆரம்பத்தில் மாஸாநாம் மார்க்க சீர்ஷோஸ்மி என்ற உத்தம மாதத்தில் பெண்கள் அவச்யம் படிக்கவேண்டும்.

விஷ்ணுபுரம்

இவ்வருஷம் உபநயனமான சிறுவர்களின் வித்யை

ஆங்கிலத்தை நிறுத்தி, வேதாப்யாஸம்

தனது சிஷ்யகோடிகளில் உபநயனமான பிராம்மண சிறுவர்களை உபநயனமானது முதல் ஒருவருஷம் வரையிலாவது எந்த பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பாமல் அவர்களுக்குஅவரவர்கள் வேதத்தை கிரஹணாத்தியயனம் செய்விக்கவேண்டும் என்பது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் அபிப்பிராயம்.

அதன் பிரகாரம் இவ்வருஷம் விஷ்ணுபுரத்தில் உபநயனமாகிய தங்கள் குமாரர்களை 1. ஸ்ரீ. வி. மகாதேவய்யர் 2.ஸ்ரீ அம்மாபேட்டை ப. வெங்கட்டராமய்யர் 3. ஸ்ரீS. கோபால சாஸ்திரிகள் (சாஸ்திர ரத்னாகரம் ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் குமாரர்) ஆகிய மூவரும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் நிறுத்திவிட்டார்கள். குமாரர்களின் பெயர் கிரமமாய் 1. ராமன் 2. பஞ்சாபகேசன் 3.கிருஷ்ணமூர்த்தி. இப்பொழுது ஷை பையன்கள் ஸ்ரீ ஆசார்யாளின் அபிப்பிராயப்படி, குரு சுச்ரூஷை செய்துகொண்டு அத்யயனம் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். ஷை பையன்கள் முதலாவது இரண்டாவது பாரங்களில் வாசித்து வந்தார்கள். இதே வருஷத்தில் இவ்வூரில் நடந்தபாக்கி இரண்டு உபநயமான பையன்களும் பள்ளிக்கூடத்தை விட்டும் அத்தியயனம் செய்யவும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதற்கு முன்பே காவேரிப்பட்டணம்,பாரதமணி ஆசிரியர் கே.எஸ். வெங்கட்டரமணி அவர்களும் தன்னுடைய புத்திரன் சி. சுப்ரமணியனை இதே பிரகாரம் செய்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

[illegible] முறையிலும், உண்மைக் கல்வியிலும் மு[illegible]த்தரமான அனுபவம் பெற்றவர்கள் என்பதால் அவர்கள்வழியை எல்லோரும் அனுஷ்டிக்கலாம் என்பதற்கு வழிகாட்டிகளாய் இருக்கிறார்கள் என்பதை நான் கூறவேண்டியிருக்கிறது.

S. சந்திரசேகரன்.
முத்திராதிகாரி.

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும் அசதி களைப்புச்சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சிராப்பள்ளி

ஸ்தாபகர்:-
V. B. நடராஜசாஸ்திரீ,
ஆயுர்வேதாசார்ய (Regd)

ராமச்சந்திர ஹரீஷி அவர்களின் பிரசுரம்.
பக்திஸந்தேஹத்வாந்தபாஸ்கரம் 0 4 0
கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

அத்வைத மதம்

(கும்பகோணம் அத்வைத ஸபையின் ஸம்பாவனை காலத்தில் மஹாமஹோபாத்தியாய வித்யாவாசஸ்பதி பிரும்மஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள் செய்த பிரஸங்கம்:—

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः ।
कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ॥

நரக த்வாரோத்காடன குஞ்சிகை மூன்று. காமம் க்ரோதம் லோபம். இந்த மூன்றையும் ஒவ்வொருவரும் வர்ஜிக்க வேண்டும், இது, விஷயங்களில் தோஷ தர்சனத்தால்தான் ஸாத்யமாகும். வேதாந்தவிசாரம் செய்து ஆத்மஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். வேதாந்த வித்யைப்ரசாரம் செய்வது ரொம்பவும் முக்யமான காரியம். வேதாந்திகளுக்கு வேண்டிய யுக்திகள் நையாயிகர்கள் தான் தேடிக் கொடுத்திருக்கிறார்கள் இந்தயுக்திகளே நையாயிகர்களைக் கண்டிப்பதற்கும் உபயோகப் படுகிறது. நையாயிகர்களுடைய உதவியில்லாமல் அநிர்வசனீய வாதத்தை ஸாதிக்க முடியாது. ப்ரத்யக்ஷ குணம் அனுமான குணம் ப்ரத்யக்ஷ தோஷம் அனுமான தோஷம் இவைகளை விசதமாக நையாயிகர்கள் சொல்லியிருக்கிறார்கள். நையாயிகர்களுக்குள் கௌதமரைக் காட்டிலும் உதயனருக்கு கௌரவம் அதிகம். உதயனரும் ஆத்மதத்வவிவேகம் என்ற கிரந்தம்செய்திருக்கிறார். அதைக்காட்டிலும் நியாயாசார்யரா யிருப்பதால்தான் கௌரவம். உதயனர் அத்வைதத்தைப்பற்றிச் சொல்லும் பொழுது

"मोक्षनगरगोपुरायेत"

என்று சொல்கிறார் அத்வைதத்தில் உதயனருக்கு ஹார்தமான ருசியிருக்கிறது. ஸர்வம [illegible] ரவர்கள் அதிகாரத்திற்குத் தகுந்தபடி கிரஹித்துக் கொள்ள வேண்டும். புருஷனுடையப்ரயத்னம் ஆவச்யகம். வாசிஷ்டத்தில், புருஷகாரத்தை சரியான வழியில் உபயோகித்தால் சகல கார்ய சித்தியும் ஏற்படும். என்று சொல்லியிருக்கிறது. இதற்காக சில இடங்களில் ஈஸ்வரனைக்கூட நிராகரணம் செய்திருக்கிறது.

சங்கரரைப்போல் நமக்கு உபகாரம் செய்தவர்கள் வேறுஒருவரும் கிடையாது. சங்கரமததத்வத்தை சரியாக அறிந்து கொள்ளவே விஷ்ணு அவதாரங்கள் எடுத்தாரோ என்று சொல்லும்படியிருக்கிறது. புருஷன் என்பவன் துக்கசம்பந்தமுள்ளவன். வைகுண்டத்திலோ நித்யசுகம், துக்க லேசம்கூடக்கிடையாது. துக்கசம்பந்தமில்லாவிட்டால் புருஷோத்தமத்வம் சித்திக்காது. அதற்குத்தான் வைகுண்டத்தை விட்டு பூமியில் அவதரித்தாரோ என்று தோன்றுகிறது, கஷ்டப்பட்டால் தான் கதி பிறக்கும். துக்கானுபவத்தால் தான் ஆத்மப்ரவணதை ஏற்படும். வைஷயிகஸுகங்களையே ஸதா அனுபவித்துக்கொண்டிருந்தால் அந்தர்முகமான விருத்தியேற்படாது இதனால்தான் குந்தியானவள் கிருஷ்ணனிடம் ஸதா ஈஸ்வரஸ்மரணம் ஏற்படுவதற்காக

"विपदः सन्तु नः शश्वत्',

என்று ஆபத்தை பிரார்த்திக்கிறாள். துக்கத்திற்கு அநேக விநியோகம் சொல்லப்பட்டிருக்கிறது. பவபூதி

"दुःखसंवेदनायैव रामे चैतन्यमाहितम्"

துக்கத்தை அறிந்து கொள்ளத்தான் ராமாவதாரம் என்று சொல்லுகிறார். வேதாந்த சாஸ்திரத்தில் மனுஷ்யாளுக்கு அதிகாரம் என்பதை

"मनुष्याधिकारत्वाच्छास्त्राणां"

என்று பகவத்பாதாள் சொல்லுகிறாள். தேவதைகளுக்கு தியாகத்தில் புத்தி பிரவேசிக்காது. அவர்களுக்கு பிழைக்கவும் வழி தெரியாது

"नास्ति धीर्जीवितुं देवानां"

என்று ஒரு கவிசொல்கிறார் நமக்கு ஆத்மதனம்தான் ஸகல சிரேயஸ்ஸையும் கொடுக்கும். இதரதனங்கள் அனர்த்தத்தைத் தானுண்டுபண்ணும். நம்தேசம் ரொம்பவும் ஹீனஸ்திதியை அடைந்து விட்டபடியால் எல்லாவற்றையும் அழித்துவிட்டு மறுபடியும் நவீகரணம் செய்தால்தான் தேசத்திற்கு க்ஷேமம் என்று சிலருடைய அபிப்ராயம். இதுசரியல்ல வாஸ்தவத்தில் விமர்சகர்களுடைய அபிப்ராயம். பரலோகமாத்ரப்ரதானாக ஆய்விட்டபடியால் தான் நமக்கு இந்தநிலைமை ஏற்பட்டுவிட்டது.

நம்மதம், தேசஸ்வபாவம்: புராணம் முதலியவற்றை யனுசரித்துப்பார்த்தால் ஐஹிக ப்ராதான்யமே தவிர ஆமுஷ்மிகப்ராதான்யமில்லை. சரீரத்தைக் காட்டிலும் ஆத்மா வைவேறாக தெரியப் படுத்துவதற்காகவே தான் பரலோகத்தைப்பற்றி விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் அதில் தாத்பர்யமில்லை. அதனால் தான் நம்மதம் நம்தேசம் கெட்டுப் போய் விட்டது. நம் மதஸர்வ தர்மங்களுக்கும் மானுஷ்யகத்திலேதான் பர்யவஸானம். ஸ்தோத்ரங்களெல்லாம் அந்தர்யாமிக்குத் தான். இந்த லோகத்திற்குள்ளகௌரவத்தைஸ்ரீ ஹர்ஷன்நைஷதத்தில் தமயந்தி முகமாக சொல்லுகிறான்

"वर्षेषु यद्भारतमार्यधुर्याः स्तुवन्ति गार्हस्थ्यमिवाश्रमेषु ।
तत्रास्मि पत्युर्वरिवस्यया ऽहं शर्मोर्मिकिर्मीरितधर्मलिप्सुः॥

பாரதவர்ஷம், ஆசிரமங்களுக்கு கார்ஹஸ்த்தத்தைப் போல் சிறந்தது. சுகத்தையனுபவிப்பதற்கும் தர்மத்தை யனுஷ்டிப்பதற்கும் இஹலோகத்தில் தான் முடியும்.

தேவலோகத்தில் அளவுக்குட்பட்ட சுகத்தை யனுபவிக்க முடியுமே தவிர அனுஷ்டிக்க முடியாது. தேவலோகாதிகளில் போய் வேதாந்த விசாரம் செய்து முக்தியடைவதென்பது அநேக முக்தி மார்க்கங்களில் ஒரு வழியாயிருந்தாலும் அது முக்யமான ப்ரக்ரியையல்ல.

நம் மதத்தில் தர்சனங்களுக்குள் பரஸ்பர விரோதமே கிடையாது. தர்சனத்வைதமும் உண்டு. ஆசார்யாளுக்கு ஒருவரிடமும் கோபம் கிடையாது. சுருதிக்கு அப்ராமாண்யம் ஏற்படும்படி பேசினால்தான் கோபம் வரும். பாஞ்சராத்ராதிகரணத்தில் எல்லா அம்சங்களையும் ஒப்புக்கொண்டும் சுருதிக்குப்ராமாண்யத்தைக் குறைத்துப் பேசினதால்தான் கோபம் வந்தது

"चतुर्षु वेदेषु परं श्रेयोऽलब्ध्वा शाण्डिल्य इदं शास्त्रमधिगतवान्"

என்று சொல்கிறார்கள். ஸூத்ர பாஷ்யத்தில் ப்ரவர்த்தித்த ஆசார்யாளுக்கு உபநிஷத் வியாக்யான ஸ்மரணமே எப்பொழுது மிருக்கிறது. நம்முடைய சுகிர்த வசத்தால் நம் மதத்தில் நித்யபத்தாளும் நித்ய முக்தாளுமில்லை. இதர மதத்தை நிந்திக்க வேண்டிய அவசரத்திலும்

"अबार्हदारण्यकमेतत्"

என்று இம்மாதிரி சொல்லுவார்களே தவிர அதிகமான நிந்தா வார்த்தைகளை உபயோகிக்க மாட்டார்கள். சாங்கர மதத்தில் அனுபாதேயமான அம்சமே கிடையாது. அனாதி என்ற பதத்திற்கு

"न विद्यते आदिः

ஆதியில்லை

"न ज्ञायते आदिः"

ஆதி அறிய முடியவில்லை என்று இரண்டுவிதமாகவும் வியாக்யானஞ் செய்யலாம். ப்ரபஞ்சத்தின் உத்பத்தி காலத்தைப்பற்றி விசாரம் செய்வதில் பிரயோஜனமில்லை. வேதங்களில் எல்லா மதங்களின் அம்சமும் இருக்கிறது. எல்லா கிரந்தங்களிலும் உபாதேயமான அம்சமிருக்கிறது. ஸாராஸார விவேசனம் செய்ய வேண்டும். தேவதாபாரம்யத்தை நிர்த்தாரணம் பண்ணுவதில் ப்ரவர்த்தித்த சுருதியானது (ஐதரேயப்ராஹ்மணம்)

"अग्निर्देवतानामवमः विष्णुः प्रथमः"

அன்று ஆரம்பித்து நிர்த்தாரணம் செய்யாமலே மத்தியில் விட்டு விட்டது. இதனால் அநிர்வசனீய வாதம்தான் வெளியாகிறது. கண்டனகண்ட காத்யத்தில் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு நிர்வசனம் செய்ய முடியாது என்பதை நன்றாக விளக்கிவிட்டு அநிர்வசனீய வாதத்தை ஸ்தாபிக்கிறார். தத்வத்தைப்பற்றி அனுபவஸ்வப்ரகாச வாதத்தில் சொல்கிறார். தத்வத்தை மௌனத்தால் அறிந்து கொள்ளலாம். சிரத்தை ஆத்ம குணம் ஆசார்யோபஸத்தி ஆசார்யானுக்ரஹம் இவைகளை சாதனமாகச் சொல்லுகிறார். கர்மானுஷ்டானத்தால் சித்தசுத்தி ஏற்பட்டு பகவத் பக்தியால் ஞானம் ஏற்படலாம். கேவலகர்மாவை அவலம்பிக்கிறவர்களை நீலகண்ட விஜயத்தில் பரிஹஸிக்கிறார். சோதித்துப் பார்த்தால் ஒன்றும் சாரமில்லை ஆத்மதனம்தான் முக்யசாரம் இதைக்காண்பித்தவர்கள் பகவத்பாதாள்.

இந்த உபகாரத்தை நாம் கட்டாயம் ஸ்மரிக்கவேண்டும். ஈஸ்வரனுடைய அவதாரம் தான் பகவத்பாதாள். ஞானஸ்வரூபி விஷ்ணுவிடம் நமக்கு உபாஸ்யத்வபுத்தியுண்டு

"तदेतदतिगम्भीरं"

என்று சொல்லும்படியான ஆத்மதத்வத்தை கவிமாதிரி மூர்த்தம்போல் நமக்கு காண்பித்தவர்கள். அமூர்த்தமாயுள்ள ரசத்தைத் ஆனந்தவர்தனர், அபிநவகுப்தர்முதலான ஆசார்யாள் மூர்த்தமாக காண்பித்ததுபோல் ஆசார்யாளும் நிர்குணப்ரஹ்மத்தை காண்பித்திருக்கிறார்கள். எப்படி ரஸம் ஆபிதானிக்யாதி விருத்திகளுக்கு விஷயமில்லையோ, அனுபவைகவேத்யமோ அப்படியேப்ரஹ்மமும். நிர்குணப்ரஹ்ம ப்ரதிபாதனத்தில் ஆசார்யாள் கவி. இது போல்வேறு ஒருவரும் கிடையாது அவாங்மனஸகோசரமான ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரித்தவர்கள் தான் உபதேசிக்கமுடியும் வெறும் சப்தஜாலங்களால் என்றும் ப்ரயோஜனமில்லை. ஆபிதானிகமார்க்கம் உபயோகமில்லை. வையஞ்ஜனிகமார்க்கத்தால் தான் முடியும். ராமானுஜசாங்கரமதங்களில் சப்தபேதமிருந்தாலும் சாரமான அம்சங்களில் அதிகவியவதானமில்லை. பரமேஸ்வரனைப்பற்றி நீலகண்ட தீக்ஷிதர்

"इत्याभ्यन्तरवृत्तिरसिकः बाह्यापेक्षः स्वयं

என்று சொல்லியிருக்கிறார். ப்ரமேஸ்வரருடைய அவதாரமான சங்கரமதத்திலும் ஆப்யந்தரவிருத்திக்குத்தான் ப்ராதான்யம்

"असंबन्धं ज्ञानकर्मणोः केचिदाचार्या ऊचिरे',

என்று சொல்லியிருக்கிறார்கள் ஆந்தரவிருத்திப்ராதான்யமில்லாவிட்டால் கர்மாவைக் காட்டிலும் என்னவிசேஷமிருக்கிறது. சில பேர் அத்வைதத்தை அவலம்பித்ததால்தான் பௌருஷம் போய்விட்டது என்று சொல்

"पुरुषान्न परं किंचित्"

லியிருக்கிறார்கள். அது தப்பு புருஷகாரத்திற்கு அசங்குசிதமானயோக்யதையைக் கொடுத்தவர்கள் இவர்கள் தான்.

தொடர்ச்சி 3 பக்கம் பார்க்க.

காலஞ்சென்ற ஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகள்

நமது அனுதாபம்

ஆர்யதர்மத்திற்கு வெகு காலம் ஆசிரியராகயிருந்து நமது பரமாசார்யாளுடைய அனுக்ரஹத்தையுமடைந்து கவனசக்தியில் அதிசயமான சாமர்த்யமடைந்திருந்த ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் காலகதியை அடைந்த விவரம் கேட்டு மிகுதியான துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் வரகூர் ஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள் தன்னுடைய பாஞ்ச பௌதிகதேகத்தை விடுத்தாரென்று கேட்க ஆராத் துயரத்தை அடையும்படியான காலம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய பிரிவை ஆஸ்திக சமூகமானது எவ்விதம் பொருக்க முடியுமென்பது சந்தேகமே.

மிகுதியாகப்படித்து படித்தவைகளை நன்குக அறிந்து காதலாமலகம்போல் எல்லோருக்கும் எந்த சமயத்திலும் பச்சை மரத்தில் ஆணி அறைந்ததுபோல் உபதேசம் செய்வதுடன் தன்னுடைய அனுஷ்டானத்தால் எல்லோரும் தன்னுடைய வார்த்தைகளை பதின்மடங்கு கௌரவ புத்தியுடன் கிரஹணம் பண்ணும்படி செய்யும் சாமர்த்தியம் வேறொருவருக்கு உள்ளதாகச் சொல்ல முடியாது. சாதாரணமான கதையைச் சொல்லி முடிவில் அதனால் அறியவேண்டிய ஓர் பெரிய தத்வத்தை விளக்கிக் காட்டுங்கால் படித்தவர்களுடைய ஹிருதயத்திற்கு மிகுதியான ஆஹ்லாதம் ஏற்பட்டு வந்ததுடன் பாமர ஜனங்களுக்குக்கூட தத்வங்களை எளிதில் தெரிந்து கொள்ளும்படியான சந்தர்பம் ஏற்பட்டுவந்தது.

அவர்களுடைய படிப்பின் விசேஷமும் வாக்கினுடைய சாதுர்யமும் சௌஷ்டவமும் ஞானசாதனங்கள் பூர்ணமாக அறியப்பட்டிருந்தும் கர்மாவினுடைய அவச்யத்தை ஸ்வானுஷ்டானத்தால் அவர்கள் காட்டிவந்த பெருமையும் சிலாகனீயமான அவர்களுடைய சௌலப்யமும் கம்பீரமான சாந்தமும் யாருடைய மனதைத்தான் கவராமல் விட்டது.

அத்வைத சபா முதலிய சமாஜங்கள் நடக்கும் காலங்களில் விசேஷ ஆர்பாட்டங்களில் ஈடுபடாமல் தனியான பிரதேசங்களை அலங்கரித்து விசேஷ அபிப்பிராயங்களுக்காக ஆஹ்வானம் பண்ணப்பட்ட காலங்களில் நிர்பயமாகவும் பிறருடைய நோக்கங்களை லக்ஷ்யம் செய்யாமலும் ஆதாரங்களைக்காட்டி அவர்களுடைய அபிப்பிராயம் கொடுக்கப்படும் காலங்களில் கேட்பவர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும் அதிசயமான ஆனந்தம் தானே ஏற்படும். தர்மசாஸ்திர சம்பந்தமான சந்தேகங்கள் அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு போனால் சிரமத்தை வகித்து ஆதாரங்களைப் பொருக்கி வெகுதெளிவாக சந்தேகங்களை நிவர்த்தி செய்துவந்தார்கள். அவர்களுடைய ஆஹாரநியமமும் ஓர் அதிசயமே.

அவர்களுடைய பிரிவானது அவர்களுடைய குடும்பத்தார்களுக்கு மாத்திரமல்ல ஆஸ்திக சமூகத்திற்கே பெருத்த நஷ்டம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பண்டிதக் கோர்வையில் அவர்களுடைய ஸ்தானமானது இனி காலியாக இருக்க வேண்டுமேதவிர அதை பூர்த்தி செய்வதென்பது சாத்யமில்லை.

அவர்களுடைய விசேஷங்களைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் மிகுதியாகாது. கடைசியாக அக்னி உபாசனத்தையும் பலமாக நடத்தி சோமயாகத்தையும் பூர்த்தி செய்து அனுஷ்டானங்க்ள் தலை விரிகோலமாக கிடக்கும் இக்கலியில் ரயிலில் ஏறுவதில்லை யென்ற விரதத்தையும் பூண்டு சஞ்சரித்தார்கள். இப்படிப்பட்ட மகான்கள் சிரஞ்சீவிகளாக இருந்தால் சமூகத்திற்கு ஓர் பெரிய ஆதரவாக இருக்கும்.

என். சாம்பசிவ அய்யர், பி.எ., பி.எல்.,

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

அதை சரியாகத் தெரிந்துகொள்ளாததால் தான் இவ்வாறு அனர்த்தமேற்பட்டது. ப்ரபஞ்சத்தைமித்யையாகச் சொல்வதை வைத்துக்கொண்டு தூஷிக்கிறார்கள்.

இல்லை என்று சொல்லவேயில்லை. ப்ரபஞ்சத்தின் சத்தை எல்லையுள்ளது ஆத்மாவின் ஸத்தை எல்லையில்லாதது.

எல்லையுள்ளது என்று தெரிந்து கொள்ளாததால் ஸர்வானர்த்தமும். இது விஷயத்தில் ஆசார்யாள் பஹு உபகாரம் செய்தவர்கள், அவர்களால் ப்ரதிஷ்டாபிதமாயும் ப்ரசாலிதமாயுமான அத்வைத மதத்தை ப்ரசாரம் செய்வது ரொம்பவும் ஆவச்யகம் இதற்காகத் தான் இந்தமாதிரியான காரிங்களை அய்யுவய்யர் முதலானவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த சபையும் ஏற்பட்டது. எல்லோரும் சேர்ந்து இதை அபிவிருத்தி செய்து ஆசார்யாளுடைய கிருபைக்கு பாத்திரர்களாக வேண்டும்.

திருக்கோவிலூர்

அனுதாபம்

ஆரியதர்மாபி விருத்தினி பிராம்மண ஸபை 23—11—40-ல் ஓர் அநுதாபக் கூட்டம் நடைபெற்றது அது ஸமயம் பிர[illegible] சேஷ[illegible]கனபாடிகள், ஸ்ரீ மஹோபதேசக கவிரத்நம் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் காலஞ்சென்றது பற்றியும் அத்தோடு குணதிசயங்களை பற்றியும் அத்தோடு மாத்திரமில்லாமல் வரகூர் ஸ்ரீ பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதிபூஷண வெங்கட்ராம சாஸ்திரிகள் பரமனடி சேர்ந்ததை சென்ற வாரம் ஆ, த பத்திரிகையில் பார்த்து பரமதுக்கத்தை ஷ்டி ஸபையார் அடைவதாயும் மேல் கண்ட இவ்விரு வித்வத் சிகாமணிகளும் இந்த ஸபைக்கு ஆரம்ப காலத்தில் சுமார் 6 ஞு விஜயம் பண்ணி அநேக துர்வாதங்களை கண்டித்து ஸபையை விருத்தி செய்ததை பற்றியும், பேசி இவ்விரு பண்டிதர்களின் மறைவானது ஸநாதந உலகிற்கே பெரும் நஷ்டமென்றுர் கூறி பிறகு இவ்விரு பண்டிதர்களின் குடுப்பத்தாருக்கு இந்த ஸபையார் மனமார்ந்த மிக்க அநுதாபத்தை தெரிவிப்பதாகவும் பேசி முடித்தார்கள். பிறகு ஆரியதர்ம பத்ரிகையில் வந்த அநுதாபம் ஸபையில் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் படித்தார் கூட்டம் கலைந்தது. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியள்

சென்னைமாகாண வர்ணாச்ரம
சுயராஜ்ய சங்க மகாநாடு
திருவண்ணாமலை

1940-ஞு டிஸம்பர்-மீ 9, 10, 11உ

வருக! வருக!!

12—12—40 அண்ணாமலை தீபம்.

திருவண்ணாமலை மகாநாடு
பிரதிநிதிகளின் ஜாகை
தனிக்கோடி முதலியார் இல்லம்
வடக்கு வீதி,
திருவண்ணாமலை.

ஏகாதசி உபந்யாஸம்

கும்பகோணம்

வழக்கம் போல் டபீர்கீழத்தெரு காவிரி படித்துறையில் 25—11—'40 ஏகாதசி தினம் சீனிவாஸ நல்லூர் ஸ்ரீநாராயணசாஸ்திரிகள் அவர்களால், "அஜாமிளோ பாக்யானம்" என்ற கட்டம் மிக விரிவாகச் சொல்லப்பட்டது. ஸ்ரீ சாஸ்திரிகளின் பிரவசன சக்தி வெகு அழகாகவிருந்தது அஜாமிளர் தான் சிஷ்டராயிருந்தும் நியமத்திலிருந்து தவறி பாபஞ்செய்து கடைசியில் மரணத்தருவாயில் நாராயணன் என்ற தன் குழந்தையைக் கூப்பிட்டு பிராணனைவிட உடனே விஷ்ணு தூதர்கள் தோன்றி யமதூதர்களை விரட்டி வைகுண்டத்துக்கு அழைத்துச் சென்றதும் பகவந்நாமஸ்மரணத்தின் மஹிமை மஹா சிறந்தபக்தி சாதனம் என்பதைப் பற்றி உருக்கமாக சொல்லப்பட்டது.

இதுவரை மூன்றுதரம் வேண்டுகோளுக்கிணங்கி ஆவலுடன் தட்டாமல் வந்து, அரிய உபந்யாஸம் செய்த ஸ்ரீசாஸ்திரிகளுக்கு நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். கடைசியில் துளஸிமாலை பிரஸாதம் வழங்கப்பட்டது.

எஸ். ராஜாமணி சாஸதிரி

திருவண்ணாமலை மஹாநாடு.

ஓர் வேண்டுகோள்

(ஓர் ஸநாதனி)

1940-ஞு டிஸம்பர்-மீ 9, 10, 11தினங்களில் [illegible] வர்ணாச்ரம சுயராஜ்ய சங்க மஹாநாட்டு[illegible] பிரதிநிதிகள் ஏராளமாய் விஜயம் செய்ய வேண்டுகிறேன். மகாநாடு கூடிக் கலைவதுடன் நிற்கலாகாது. மஹாநாடுகளில் இதுவரை தீர்மானிககப்பெற்ற விஷயங்கள் பெரிதும் நடை முறையில் வரவேண்டும். தீர்மானங்கள் குறித்துப் பேசுகையில் சம்பந்தமில்லாத விஷயங்களையும், ஸபையோர் வெறுப்படையும் முறையிலும், நீண்ட நேரம் பேசப்படாமல் இருத்தல் அவசியம் 10 அல்லது 15 நிமிஷத்தில் தீர்மானத்தைக் குறித்து விளக்கமாகப் பேசுவது தான் உசிதம். விழாத் தலைவர்களின் பிரசங்கம், தீர்மானங்கள் அனைத்தும் தமிழ் பாஷையிலேயே இருத்தல் வேண்டும். தமிழ் பாஷை பேச இயலாதவர் மட்டும் வேறு பாஷையில் பேசுவது விரும்பத்தக்கது. இடைவிடாது பிரசாரம் செய்ய பிரசார கோஷ்டி அமைத்தல், பெரும் நிதி திரட்ட செல்வாக்குள்ள கனதனவான்களடங்கிய கமிட்டி நிறுவுதல், பத்திரிகை பிரசாரத்தைத் திறம்பட நடத்தல், இம்மூன்று முக்கிய விஷயங்களில் மஹாநாடு உருவான திட்டம் வகுக்க முன்வர பெரிதும் வேண்டுகிறேன்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

வைதிக தர்ம ஸங்கம் தேசங்கம்

(5) ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகள் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் முத்திராதிகள் முறையானது ஆஸ்திக ஸமூகத்திற்கு மிகவும் நலத்தைத்தரும்.

இப்படிக்கு
ஸ்ரீ பாதராஜதாஸன்.
ஒகை.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

விக்ரம-௵ கார்த்திகை-மீ 13உ

மாகாண வர்ணாச்ரம மஹாநாடு.

சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கமஹாநாடு திருவண்ணாமலையில் டிஸம்பர் 9, 10, 11, தேதிகளில் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது ஸனாதன ஸமூஹத்திற்கு மிகுந்த ஸந்தோஷத்தைக் கொடுக்குமென்பதில் ஐயமில்லை. தென்தேசத்தில் மிக பிரஸித்தக்ஷேத் [illegible] தீப உற்சவகாலத்தில் இதை ஏற்பாடுசெய்தது முற்றிலும் பொருத்தமானதே. ஸநாதன தீப ஒளிமங்காமல் பிரகாசிக்கும்படி செய்ய ஏற்றகாலமும், தேசமும், இதைப்போல் கிடைப்பது அரிதே!

தீப உத்ஸவத்திற்குப் பலவூர்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்காகக் கூடும் பக்தர்கள் பாரலௌகிகமான ஒரு நம்பிக்கையாலும், சாஸ்திர விதியாலும் தூண்டப்பட்டு, அதற்குக் கட்டுப்பட்டே அங்கு கூடுகிறார்களென்பது கவனிக்கத்தக்கது. ஆதலால் அங்கு மதநம்பிக்கை காரணமாகக் கூடும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் தீவ்ரமான ஸநாதன தர்மிகளேயென்பதை மறுக்கவொண்ணாது. சாஸ்திர, தெய்வ, மத நம்பிக்கையில்லையானால் அவ்வளவு பெரிய கூட்டம் அங்கு கூடக்காரணமேயில்லை. ஆகையால் அந்த ஆஸ்திகர்கள் கூட்டத்தின் முன்பு, நமதுமத தர்மங்களுக்கு ஏற்பட்டுவரும் கஷ்டங்களை தெரிவித்துப் பரிகாரம் செய்வதற்கு இதைப்போன்ற ஸந்தர்ப்பம் வேறு எதுவும் ஏற்றதாயிராது. இனி இம்மாதிரி நமது ஸநாதன மகாநாடுகளை தேவாலய உத்ஸவாதி ஸமயங்களிலேயே நடத்துவதை வழக்கமாக்கிவிடுவது நல்லது.

ஸனாதன இயக்கம் மந்தப்பட்டிருக்கும் சமயத்தில் இத்தகைய பெரிய மஹாநாடுகளை நடத்துவது சிரமஸாத்யமானதே. தனமும் மனித உதவியும் கிடைப்பது எளிதல்ல. ஆயினும் பிரகிருத மஹா நாட்டிற்கு இவ்விஷயத்தில் ஏற்பட்டுள்ள ஸௌகர்யத்தை அறிந்து அளவற்ற மகிழ்ச்சியும் தைர்யமும் ஸனாதனிகளுக்கு ஏற்படக்கூடும். இந்த மஹாநாட்டை திருவண்ணாமலை ஆலயதர்ம கர்த்தாவும், ஆஸ்திக சிரோமணியுமான கோட்டையூர் ஸ்ரீமான் அழகப்ப செட்டியாரவர்கள் தமது பொறுப்பில் நடத்திக் கொடுக்க முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீமான் செட்டியாரவர்கள் ஆலயதிருப்பணிகள், அன்னஸத்திரங்கள் வேதபாடசாலைகள் போன்றகணக்கற்ற தர்மங்களைச் செய்து வருபவர். ஆலயப்பிரவேச அந்யாயம் ஏற்பட்டபின் இவர் ஸனாதன தர்ம பிரசாரத்திற்கும் பூர்ணமாக உதவி செய்து வருகிறார். கோட்டையூரில் ஓர் ஸனாதனதர்ம வித்யாலயத்தையும் ஸமீபத்தில் ஏற்படுத்தியுள்ளார். செட்டிமார் நாட்டில் வர்ணாச்ரம் ஸ்வராஜ்ய ஸங்கத்திற்கு நல்லசெல்வாக்கு ஏற்படும்படி செய்தவர் இவரே.

இத்தகைய தார்மிகோத்தமர் இந்த மஹாநாட்டை சிறப்பாக நடத்த முன் வந்திருப்பதை ஸனாதன உலகம் எப்போதும் நன்றியுடன் பாராட்ட வேணும்.

மற்ற கக்ஷியாரைப் போல் வர்ணாச்ரமிகளும் அடிக்கடி மஹாநாடுகள் நடத்துவது அதிகரித்து விட்டது. இதன் மூலம் ஸனாதனிகளுக்குள் கட்டுப்பாடும், உத்ஸாஹமும் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். இதர ஸபைகள் பலவருஷங்களாகப் பிரசாரம் நடத்தி அடைந்துள்ள பலனைக் கவனிக்கையில், ஸனாதனிகள் இரண்டொரு வருஷங்களுக்குள்ளேயே அடைந்துள்ள பலன் அதிகமென்றே நினைக்கவேணும், ஆயினும் இத்தகைய மஹாநாடுகள் தீவ்ரபிரசாரத்திற்கு வகைசெய்ய வேண்டியது அவச்யமானது. ஆலயபிரவேசச் சட்டமும், சாரதாச் சட்டமும் ரத்தாகும் வரையில் ஸனாதனிகளின் வேலை முடிந்ததாகாது. கவர்ன்மெண்டார் தற்போது நமது விஷயத்தில் அலக்ஷ்யமாயிருந்தபோதிலும் குறையை நீக்கவேண்டிய நிர்ப்பந்த காலமொன்று வராமற் போகாது.

ஆலயப்பிரவேசச்சட்ட ரத்து விஷயமாக நாம் எவ்வளவோ முயற்சி செய்தும் ஸர்க்கார் அதை லக்ஷ்யம் செய்யாமலிருக்கிறார்கள். அந்தச் சட்டம் நியாயமற்றதென்றும் பொதுஜன அபிப்பிராயத்துக்கு விருத்தமென்றும் வியக்தமாக கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருந்தும் கூட அதை ரத்து செய்ய இணங்கவில்லை. இவ்விஷயமாக இந்த மஹாநாடு வேறு தீவிர முறை இருக்கிறதா வென்பதை யோஜிக்க வேணும். இத்தேசத்தில் ஸனாதனிகளாகிய நாம் பெரும்பாலோர். நாம் கோடிக்கணக்கான வரி செலுத்தும் பிரஜைகள். ராஜசக்ரவர்த்தியின் பிரஜைகளாகிய நமக்கு நம் தேசத்திலேயே நமது மத உரிமைப்படி வாழ இடமுண்டா இல்லையா வென்பது தெரிய வேண்டும். இவ்விஷயமாக மஹாநாடு சிறந்து உறப்பான வழியில் அபிப்பிராயம் வெளியிடுவது உசிதமாயிருக்கும்.

ஸனாதனிகளுக்குள் இப்போது வேறு ஒரு முக்யவிஷயம் சர்ச்சை செய்யப்பட்டு வருகிறது. ஹிந்து மஹா ஸபையின் பிரசாரமானது தென்னிந்தியாவில் வியாபக மடைந்து வருவதால் அச்சபை விஷயத்தில் ஸனாதனிகள் எப்படி நடந்து கொள்ளுவதென்பது முக்ய விஷயம். ஸமூஹச் சீர்திருத்தம் போன்ற விஷயங்களில் ஹிந்து ஸபை ஸனாதனிகளுக்கு விரோதமாக அபிப்பிராயம் கொண்டதாயிருப்பதால் அதை நாம் ஆதரிக்க அவகாசமில்லை யென்பது சிலரின் கருத்து. ஹிந்து ஸமுதாயத்தின் பிரத்யேக உரிமைகளைப் பாதுகாக்கும் விஷயத்தில் ஹிந்து ஸபையின் கார்யமானது ஸனாதனிகளால் ஆதரிக்கப்பட வேண்டியது தானென்றும், ஸமூஹத்திருத்த ஸம்பந்தமாக ஹிந்து ஸபையானது சட்ட மூலமான நிர்ப்பந்தம் செய்யும் கொள்கையை அவலம்பிப்பதில்லையென்று உறுதிகூறினால் அத்துடன் நாம் ஏன் ஒத்துழைக்கக்கூடாதென்றும், காங்கிரஸைப்போல் ஹிந்து ஸபையானது அன்னிய நாகரீக அடிமைச் சபையல்லவென்றும் வேறு சிலர் நினைக்கிறார்கள். இவ்விஷயமாக மஹாநாடு தீர்க்காலோசனை செய்து ஒரு முடிவு செய்ய வேண்டியது அவச்யமாகும். ஸமீபத்தில் மதுரையில் அகில இந்திய ஹிந்து மஹாஸபை பிரபல ஆடம்பரத்துடன் நடக்கப் போகிறது. அதற்குள் நாம் தக்க முடிவொன்றைச் செய்வது உசிதமாகும். இவ்விஷயமாக நாம் என்ன முடிவு செய்தாலும் அது ஒற்றுமையுடன் செய்யப்படவேணும். இந்த முக்ய விஷயத்தைப் போதிய அவகாசத்துடன் நமது தலைவர்கள் யோஜிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனேயே நாம் இன்றே இதை பிரஸ்தாபிக்க முன் வந்தோம்.

மற்றபடி மஹாநாட்டில் வேறுபல முக்ய விஷயங்களும் யோஜிக்கப்பட வேணும். ஸனாதன தர்மபிரசாரத்திற்குப் பத்திரிகையின் உதவி இன்றியமையாதது. ஆதலால் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தார் தென்னிந்தியாவில் பத்திரிகை பிரசாரம் நடத்தத்தகுந்த முஸ்தீப்புடன் ஒரு ஏற்பாடு செய்யும்படி தமிழ்தேசபிரதிநிதிகள் வற்புறுத்தவேணும். முக்யமாக இப்போது நடந்துவரும் பத்ரிகைக்குப் பலவழிகளிலும் உதவிசெய்ய தீவ்ரமான முயற்சி திருவண்ணாமலையில் செய்யப்படுமென்றும் நம்புகிறோம்.

கொச்சியில் அதர்மச்சட்டம்

கொச்சி சட்டஸபையில் ஒரு ஸ்திரீமெம்பரால் கொண்டுவரப் பட்டிருந்த பால்ய விவாஹத்தடை மசோதாவானது மெஜாரிடிவோட் பலத்தால் நிறைவேறி விட்டது. எந்த ஸமூஹத்தாரையும் இந்தச் சட்டத்திலிருந்து விலக்கிவிட சட்டஸபை ஸம்மதிக்கவில்லையாம்.

இந்த மசோதாவுக்கு மஹாராஜா அங்கீகாரம் கொடுக்கப் போகிறாரா?

காந்தியடிகளுக்கு ஒரு விண்ணப்பம்

(5-ம் பக்கம் தொடர்ச்சி.)

சிறைப்படவேண்டாம். இருதரப்பிலும் எவ்வளவோ பூச்சாண்டி வித்தைகள் நடந்தேறின, இது விளையாட்டல்ல. நமக்கு ஜீவமரண வியவகாரம். அறிவாளிகள் சிறைபட்டால் மிகுந்தவர் என் செய்வர். தாற்காலிகமாக காங்கிரஸில் சேர்ந்த பிரமுகர்களும் பின்வாங்குவார்கள். இப்பொழுது போலண்டு, பெல்ஜியம், பிரான்ஸ் முதலியன ஸ்வதந்திரம் பெறுவதற்காக பிரிட்டன் எவ்வளவு பாடுபடுகிறது. பிரிட்டன் தோற்றால் என்று பிரிட்டிஷாரே சொல்கிறார்கள்- இப்படி ஆகாமலிருக்கும். ஆனால் அவர்களுடைய ஸ்வதந்திரத்திற்கும் சேர்த்து நாம் பாடுபடவேண்டாமா? எல்லாவற்றிற்கும் நம்முடைய ஆயுதமாகிய அஹிம்ஸாதர்மத்தை பலபடுத்திக்கொள்ள வேண்டாமா? இல்லாவிடின் உலகத்திற்கே நாம் எப்படி நன்மை செய்யக்கூடும்.

ஆகவே தாங்கள் சிருங்கேரி, ஸ்ரீகாஞ்சிகளில் ஜகத்குருவாகவிளங்கும் ஸ்ரீ ஸ்ரீ ஆசாரியஸ்வாமிகளுடனும் சாஸ்திரஜ்ஞர்களுடனும் ஆலோசனை செய்து மேற்கொண்டு செய்யவேண்டியதைத் தீர்மானிக்கவேணுமாக இந்த விண்ணப்பம்.

பால்ய விவாஹத்தடை மசோதாவை ரத்து செய்க.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஓர் அமெரிக்க பிஷப் கூறுவதாவது:— பெரும்பாலும் கர்ப்பத்தடை சாதனங்களை கல்யாணமாகாத பெண்களே வாங்குகின்றனர். இன்றைக்கும் அமெரிக்க தேசத்திலுள்ள 48 ராஜ்யங்களில், 9 ராஜ்யங்களில் 12 வயதிலும், மீதியுள்ள 39 ராஜ்யங்களிலும் 14 வயதிலும், பெண்கள் விவாஹம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் உஷ்ண தேசமாகிய நம் இந்தியாவில் விவாஹ வயது 12 க்கும் கீழாகத்தானே இருக்கவேண்டும்.

Frederic Pincott என்பவர் சொல்லுகிறார்:— ஹிந்துக்களின் குடும்ப வாழ்க்கையானது சந்தோஷகரமாயும், சிறந்ததாயும் இருக்கிறது. பால்ய விவாஹத்தை கடைபிடிப்பதற்கு இதுவே ஒரு சிறந்த அத்தாட்சியாகும்; அவர்களுடைய அம்மாதிரியான சந்தோஷ வாழ்க்கையே சீர்திருத்தக்காரர்களை கண்டிப்பதற்கு போதுமானதாகும்.

Mr Partington—Biologist என்னும் சரீர ஆராய்ச்சி நிபுணரின் முடிவுப்படி பெண்களுக்கு ருதுவானதிலிருந்து இயற்கை உணர்ச்சி ஆரம்பமாகிறதென்றும், பின்வரும் இம்மாதிரியான ஒவ்வொரு முறையிலும் இயற்கை உணர்ச்சிகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் ஏற்படுகிறது. தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலினால் தூண்டப்பட்டு பல மனிதர்களுடன் நெருங்கி பழகினதாக ஒப்புக்கொள்ளும் பலபெண்கள் இருக்கிறார்கள். அதனால் கன்னித்தன்மை இல்லாமல்போய்விடுகிறது 12, வயதிலிருந்து 15 வயதிற்குள் தான் பெண்கள் பருவமடைகிறார்கள். அதனால் 12 வயதிற்கு முன்பே விவாஹம் செய்ய வேண்டிய அவச்யம் தெளிவாகிறது. (Dr Johnson

கௌரவமுள்ள ஒரு தேசமாவது பிறர் இகழும்படியான நிலையில் இருக்கப் பிரியப்படாது. விவாஹத்துக்கு முன்பே திருட்டுத்தனமான கோரிகைகள் பலாத்கார நாசோரம் காதல் ஓட்டங்கள் பிரும்மசாரி தகப்பனார்கள் கன்னித்தயார்கள் முதலியவைகளை சுய கௌரவத்தை மதிக்கும் ஒவ்வொரு சமூகத்தினரும் வெறுக்கின்றனர். ஷை கண்டவைகளை அடியோடு ஒழிக்க எந்த அரசாங்கம் தனது அதிகாரத்தை உபயோகப் படுத்தவில்லையோ, அது அரசாங்கமாகாது. ஷை விபரீதங்களுக்கு பால்ய விவாஹ தடை செய்வதற்காக இயற்றப்பட்டிருக்கும் சட்டங்கள் தான் மூல காரணம் என்று சொல்வது மிகையாகாது. பால்ய விவாக முறை இல்லாத தேசங்களின் நிலையை சற்று மேலாக ஆராய்வோமானால் திடுக்கிடும் முடிவுகள் ஏற்படுகின்றன. நம் இந்தியாவில் சட்டத்தின் சோதனை ஜயம் பெறவில்லை. பால்ய விவாக தடைக்கு எதிரான இயக்கம் தினேதினே பலபட்டு வருகிறது. மேற்கு நாகரீகத்தில் மூழ்கியிருக்கும் பரோடா ராஜ்யத்தில் இம்மாதிரியான தடை கிடையாது. மைசூர், புதுக்கோட்டை ராஜ்யங்கள் ஷை மசோதாவை நிராகரித்துவிட்டது. சற்று வழி தப்பிய திருவாங்கூர் ராஜ்யம்கூட ஆதரவு கொடுக்கவில்லை. தங்களுடைய திட வைராக்யத்திற்கு எதிராகவும், தங்களுடைய பிரஜைகளின் விருப்பத்தை உல்லங்கனம் செய்தும் தாங்கள் ஷைமசோதாவுக்கு சம்மதி கொடுப்பீர்கள் என்று நான் நம்பவில்லை.

பால்ய விவாகம் என்பது ஒரு நல்ல கட்டுப்பாடு. அனாதிகாலமாய் அனுசரித்து வருகிறோம் அதனுடைய பழமையே அதனுடைய நன்மைளுக்கு சரியான உத்தரவாதமாகும். அதனால் ஹிந்துக்கள் புத்திசாலித்தனத்திலும், தேசபலத்திலும், குறைந்தார்களில்லை. பால்ய விவாகத்தினால்த்தான் சிசு தாயார் மரணங்கள் ஏற்படுகிறதென்றும் பலஹீனமும், வம்சக்ஷீணமும் உண்டாகின்றனவென்றும் பலர் கூற்றின்படி ஹிந்துமதமே நசித்துப்போயிருக்கவேண்டும். ஆனால் உண்மையோ முற்றிலும் மாறாகஇருக்கிறது மேல் நாகரீகத்திலும், நம் நாகரீகத்திலும் உள்ளதீமைகளின் கலப்படையே இப்போது நாம் காண்பது. அம்மாதிரி இருப்பதற்கு வறுமை, அனாசார வாழ்க்கை, அமிதத்தன்மை முதலிய பல காரணங்கள் தான். நவீன ஆராய்ச்சிப்படி ஒரு பெண் முதல் ருதுஸ்னானத்திலிருந்து வாழ்க்கையில் தன்னுடைய பொருப்பை வகிக்க தகுதியுள்ளவளாகிறாள். சீக்ரம் சேர்க்கை சிசு மரணத்தையும் மற்றும் பலவித தீங்குகளையும் தடுக்கிறது. பிரசவம் சீக்கிரம் ஏற்பட்டால், அதனால் விளையும் ஆபத்துக்கள் மிகவும் குறைவு. சிறிய வயதில் அங்கங்கள் இளமையாயிருப்பதால், ஸுக ப்ரசவம் ஏற்படுகிறது.

வேதங்கள் பால்ய விவாஹத்தை ஆதரிக்கிறது. ஸ்மிருதிகள் ப்ரௌடையாகும் முன்பே தான் விவாஹத்தை கோருகிறது. ஹிந்துக்கள் 2000 வருஷங்களுக்கு மேலே பால்ய விவாஹத்தை அனுஷ்டித்து வந்தார்கள் என்று சரித்திர வாயிலாக அறிகிறோம் வியாஸர், பாணினி, வால்மீகி, பதஞ்சலி, மனு, யாக்ஞவல்கர் முதலிய ரிஷிச்ரேஷ்டர்களையும், காளிதாஸர், பவபூதி போன்ற கவிகளையும், ஸ்ரீ சங்கர பகவத் பாதாள், ராமானுஜர், மத்வர் போன்றஆசார்யர்களையும் தோன்றுவித்த நமது இந்திய நாட்டை மூடர்களும், அநாகரீகர்களும் நிறைந்த நாடு என்று சொல்வதா?

ஆதலால், பால்ய விவாஹ தடைக்கு தேவை என்ன? சாஸ்திரத்தில் இடமில்லை இயற்கை நியதிக்கு விரோதம்; அவச்யமான நிலைமையும் இல்லை. ஹிந்து மதத்தின் ஜீவாதார தத்வமே சுத்தமான கற்புள்ள ஸ்திரீயிடத்தில்தான் இருக்கிறது.

அவள் தன்னுடைய கணவனையே தெய்வமாகவும், குருவாகவும் கொண்டாடுகிறாள் அம்மாதிரியான மனப்பான்மையில் பெண்கள் சந்தோஷ வாழ்க்கை நடத்துகின்றனர் பால்ய விவாஹமே சிறந்த வழியாகும். தற்கால ரீதியில், ஸ்திரீகளின் கற்பை காப்பாற்றுவதற்கும், வர்ண சங்கரத்தை தடுப்பதற்கும் விவாக வயதை குறைக்கவேண்டும்.

காந்தியடிகளுக்கு ஒரு விண்ணப்பம்

(எஸ். வைதீஸ்வர அய்யர். கல்கத்தா)

ஐயா,

விண்ணப்பம் என்னவென்றால் (Bread Basket) "ரொட்டிக்கூடை'' என்று ஜர்மனி போடும் குண்டாக விண்-ஆகாயம். அப்பம்—ரொட்டி எனப்தரித்து நினைக்கலாம் ஆனால் அதுவல்ல. ஆகாய தத்துவமுள்ள காதில் போடும் இனிமையான வார்த்தை முன்னர் 1—2—1930ல் தங்களுக்கு நான் தபால் மூலம் சமர்ப்பித்த இங்கிலீஷ் விண்ணப்பத்தை யாரோ சாப்பிட்டு விட்டார் போலிருக்கிறது. எனக்கோ Young India விலோ ஹரிஜனிலோ இதுவரை அதற்குப் பதில் இல்லை.

நாமெல்லாரும் அடிமைத்தனம் நீங்குவதற்கு பாடுபடுகிறோம். எந்த அடிமைத்தனம் என்பதில்தான் வித்தியாஸம். சாஸ்திர விதிகளுக்கு அடிமையாயிருப்பதும் அயல் நாட்டார் அதிகாரத்திற்கு அடிமைப்பட்டிருப்பதும் நீங்க வேண்டுமென்பது தேசிய வாதிகள் கொள்கை. தீண்டாமை விலக்கும் ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமையும் தேச அடிமைத்தனம் நீங்குவதற்கு வழி என்று கண்டு பிடித்திருக்கிறீர்கள். இதற்காக தீண்டாதாருக்கும் முஸ்லீம்களுக்கும் எவ்வளவு சலுகை காட்டினாலும் பரவாயில்லை என்பது கருத்து. இதனால் விளைந்தது என்ன?

தேசத்திலேயே அமைதி இல்லை. தமிழ் ராஜ்யத்தை பிரித்துக்கொடு என்றார் ஒருவர் வட இந்தியாவை முஸ்லீம்களுக்குக்கொடு என்கிறார் இன்னொருவர் (பருத்த தொந்தி நமதென்று நாமிருக்க நாய், நரி, பருந்து, தமதென்றிருக்கும் என்று பட்டினத்தார் சொல்லுவது போல ஸர்வாதிகாரிகள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ) ஜாதியிலோ, தனத்திலோ உயர்ந்தவரென்பவர் அதிலும் ஸ்திரீகள் வெளிப்பட்டால் அவர்களுக்கு அகாரணமாக ஏச்சும் அவமானமும் ஸர்வசாதாரணம். இதன் விளைவு எதுவரையில் போகுமோ ஆலய பிரவேசத்திலிருந்து ஈச்வர பக்தி மிகவும் குறைவு. சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாதவர்களும் வழியுள்ளவர்களும் நாகரீகமென்றும் அதற்கு அடையாளமென்றும் உணவு, உடுப்பு, சினிமா, பந்தயம் முதலியவைகளில் கிலவு செய்வது அசாத்தியமாயிருக்கிறது. அரிசி, மாவு, வனஸ்பதிகளுக்கு அயல் நாட்டு ஆலை சொகுசான தின்பண்டங்கள் பழங்கள் என்ற அயல் நாட்டிலிருந்து வருபவை. ஜல வசதிக்கு அயல் நாட்டுக்குழாய்கள். வீடுகட்ட அயல் நாட்டு சாயான் வேஷ்டி துணிமணிகளுக்கு அயல் நாட்டு ஆலை, தையல்மெஷீன், நூல்கள்கண்களுக்கு அயல் நாட்டு ஸினிமா, காதுகளுக்கு அயல் நாட்டு கிராமபோன் ரேடியோ, கால்களுக்கு அயல்நாட்டு வண்டிகள். சுகாதாரம், மருந்து, விளையாட்டு சாமான்களுக்கும் அயல் நாடு தீபத்திற்கு அயல் நாடு படிப்பு அயல் நாடு இந்த அடிமைத்தனம் போகவேண்டாமா? போவதற்கு என்ன ஏற்பாடு? என்ன பிரசாரம்? தீண்டாமையும் நீங்கி முஸ்லீம்களும் ஒத்துழைத்தாலும், தேசத்திற்கே ஸ்வராஜ்யம் என்பது உண்டானாலும், தினசரி ஆகார விவகாரங்களில் அயல் நாட்டிற்கு அடிமையாயிருப்பது நீங்கினாலல்லவோ இந்த ஸ்வராஜ்யம் பிரயோஜனமுள்ளதாகும் ஸ்வராஜ்யம் வரட்டும் இந்த கெட்ட பழக்கங்களை ஒரு நொடியில் சட்டதிட்டங்களால் ஓட்டிவிடலாம் என்பதுபேசலாமேயன்றி காரிய சாத்தியமல்ல அஹிம்சையே ஆயுதமாயுள்ளவர் அடக்குமுறை நன்மையில்லை என்பது எல்லோரும் உணர்ந்தது.

ஸநாதனிகள் சொல்வது:—சாஸ்திரங்களை மீறி இந்திரிய வியாபாரங்களுக்கு ஈடுபட்டதால் இந்த அடிமைத்தனம் வந்தது சாஸ்திர விதிகளுக்கு அடங்கினால் இது நீங்கும். தங்கள் சாமான்கள் இந்தியாவில் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று தெரிந்தால் அயல் நாட்டார் நமக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டார் செய்யமுடியாது. ஒருசமயம் அதிகாரம் செலுத்தினாலும் நமது ஆசாரங்கள் குலையாமல் ஆத்மாவாவது நமக்கு சொந்தமாயிருக்கும்.

தீண்டாமையும் நீங்கவில்லை. முஸ்லீம் ஒத்துழைப்புமில்லை. இப்பொழுது ஸத்யாக்ரஹம் எதற்கு? சர்க்காரை எதிர்க்கவேண்டாம்.

(தொடர்ச்சி 4ம் பக்கம் 3ம்காலம் பார்க்க)

வைதிக தர்ம ஸங்கம், தேசஸங்கம்.

वैदिकधर्मसघं: देशसंघ:

॥ श्रीपरमेश्वरप्रार्थनम् ॥

भगवान् श्रीराम एव समर्थः सर्वेषु व्यवहारेषु । परमेश्वरः स एव सर्वस्य कर्ता । तत्प्रीत्यै क्रियमाणानां निखिलानां कर्मणां वयं हि निमित्तमात्रम् । स एवास्मकं कर्मणां साधयतु साधनानि यजमान-इव स्वकर्मणाम् । तद्यथाशास्त्रमनुतिष्ठन्तो वयं तस्मिन्नेव निदधाम बुद्धिम् । अनन्यास्तमेव चिन्तयाम । स एवास्माकमावहतु योगक्षेम । कारयतु चास्मान् कर्तव्यानि । सदा तस्यैवाज्ञा अस्मदान्तरे स्फुरतात् । दोषानस्मदीयान्विचिन्त्य परिहराम । गुणांश्च स्वीकरवाम । स एव प्रथते सर्वत्र स्वतन्त्रः । परतन्त्रा वयमर्हामस्तस्य शरणवरण एव । प्रपन्नानां रक्षणेऽपि प्रभवति स एव । इत्यसकृदनुस्मरन्तो व्यवहरन्तश्च वयं सर्वथा जय-शालिनो भवेम । सर्वथा जयशालिनो भवेम ।

ஸ்ரீ பரமேச்வரப்ரார்த்தனம்

நமது வியவஹாரங்களெல்லாவற்றிலும் பகவான் ஸ்ரீ ராமமூர்த்தியே ஸமர்த்தராவர் அவரே இப்பிரபஞ்சத்தை யெல்லாம் ஸிரு...ராவர் (ஆகலின்) அவரே பரமேச்வரன். அவரது ப்ரீதிக்காகவே ஸகல (ச்ரௌதஸ்மார்த்த) கர்மாக்களையும், நாம் அனுஷ்டித்து வருகின்றோம். (ஆகவே) அத்தகைய கர்மாக்களுக்கு (ஆஸ்திகர்களாகிய) நாம் நிமித்தமாத்திர மாயிருக்கிறோம். அவரே அப்படிப்பட்ட கர்மாக்களை (ச்செய்வதற்கு வேண்டிய) ஸாதநங்களை நிறைவேற்றி வைப்பார். யஜமானன் தனது வேலைகளுக்குறிய ஸாதநங்களை ஸம்பாதித்துக் கொடுப்பதுபோல் இவ்வுலகிற்கு யஜமானனை ஸ்ரீ ராமனே தன்ப்ரீதிக்குச் செய்யப்படும் கர்மாக்களின் ஸாதனங்களை ஸம்பாதித்துக் கொடுப்பார். சாஸ்திரவிதி வழுவாமல் அக்கர்மாவை யனுஷ்டித்துக்கொண்டு அந்த பகவான் ஸ்ரீ ராமனிடத்திலேயே புத்தியை நாம் செலுத்திக் கொண்டிருப்போம். இதர சிந்தனையை யகற்றி அவரையே அனுதினம் அனுஸந்தானமும் பண்ணிக்கொண்டிருப்போம். அன்ய சிந்தனையற்று அவரையே சரணாக அடைந்துள்ள நம்மவர்களின் யோக க்ஷேமத்தை அவரே அவச்யமாய் வஹித்து வருவார். செய்யத்தகுந்த நற்கார்யங்களில் அவரே நம்மை தூண்டவும் வேண்டும். அநவரதம் அவரது ஆக்ஞை நமது உள்ளத்தில் ப்ரகாசித்துக் கொண்டிருக்க வேண்டும். நம்மிடமுள்ள துர்குண தோஷங்களை நாமே நீர ஆராய்ந்து பார்த்து தூர விலக்கிக் கொள்வோமாக. நற்குண நற் செய்கைகளை நாம் ஸ்வீகரித்துக் கொள்வோமாக.

எல்லா வற்றிற்கும் அந்த ஸ்ரீராமசந்திரமூர்த்தியே ஸ்வதந்த்ரராவர். பரதந்த்ரர்களாகிய நாம் ஸ்வதந்த்ரரான அவரிடம் சரணாகதி செய்வதில்தான் அர்ஹதை யடைந்திருக்கிறோம். சரணாகதி செய்த பக்தர்களை ரக்ஷிப்பதற்கும் அவர்தான் ஸமர்த்தராவார் இவ்விதம் அடிக்கடி அந்த ஸ்ரீ ராமச்சந்திர பகவானை நினைத்துக் கொண்டும், வியவஹரித்துக்கொண்டும் நாம் எல்லா விதத்திலும் ஜெயம் பெற்று விடுவோமாக. இதனால் எல்லாவித ஜெயத்தை நிச்சயமாய் நாம் அடைந்து விடலாம்.

இந்த ஆச்ரமத்துக்கு வைதிக தர்ம ஸங்க ஆச்ரமம்' எனப்பெயரிடப் படுகிறது. இப்பெயரின்கண் வைதிகம் தர்மம், ஸங்கம், ஆச்ரமம் நான்கு அம்சங்கள் உள்ளன. இவற்றுள் 'வைதிகம், என்பது வேதங்களுக்குறியது என்பதைக் காட்டி விசேஷமாக குரு சிஷ்யக்கிரமமாய் நான்கு வேதங்களையும், பதினான்கு வித்தியாஸ்தாநங்களையும், இதர கலாசாஸ்திரங்களையும் கிரஹித்தல் என்னும் பொருளைக் குறிக்கிறது. தர்மம், என்னும் இரண்டாவது அம்சம் முதலில் கிரஹித்த சாஸ்திரங்களின் அர்த்தஞானத்தையும் அவற்றுள் அடங்கியுள்ள அநுஷ்டாந யோக்யமான ஆழ்ந்த கருத்துக்களையும், தர்மஸூக்ஷ்மங்களையும் உள்ளபடி நிச்சய ரூபமாய் அறிதல் என்பதைக் காட்டுகிறது. மூன்றாவதான ,ஸங்கம், என்பது முற்கூறிய இரண்டு யோக்யதைகளையும் அடைந்த ஆஸ்திகர்களது கூட்டம் என்பதைக் காட்டுகிறது. இந்த ஸங்கத்தின் அபிமாநிகளும், அங்கத்தினர்களும் வெகுவாய் கிருஹஸ்தர்களே ஆவார்கள். இவர்கள் ஸங்கமாகச் கூடி வியவஹரிப்பதற்கு லக்ஷ்யமும் பிரயோஜநமும் வருமாறு:— (1) சுருதிஸ்மிருதிகளிற் கண்ட கர்மங்களை அநுஷ்டிக்கத் தக்க யோக்யதையை ஸம்பாதிக்க உபாயம் தேடுதல்; (2) கர்மாநுஷ்டாநத்துக்கு இன்றியமையாத சித்தஸமாதானத்தை தாரணாப்பியாஸத்தினால் பழக்கிக் கொள்ளுதல்; (3) நமது ஸமூஹம் சீர்குலைந்திருக்கும் இந்நிலையினின்று கிரமமாய் ஒழுங்கு பெற்று பரம ஸௌக்யத்தையும், பரமபுருஷார்த்தத்தையும் அடையக்கூடிய வழிகளில் உத்ஸாஹமுள்ளவர்களாக உழைக்க முன்வருதல். 'ஆச்ரமம், என்ற நான்காவது அம்சம் இந்த ஸங்கத்தின் பெருமுயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் குருகுல வித்யாநிலயத்தைக் குறிக்கிறது. இந்த ஆச்ரமம் பால பிரம்மசாரிகளைத்தங்கள் பிரம்மசரிய நியமங்களுடன் வேதங்களையும், காவ்யசாஸ்திரங்களையும், கூடியவரையில் இதரவித்யைகளையும் அப்பியஸிக்கும்படி செய்யும் பொருட்டாகும்; யுவாக்களான இதர பிரம்மசாரிகளை ஸ்வதர்மாநுஷ்டாநத்திலும்; ஸமூஹஸேவையிலும், தர்மத்துக்கு விரோதமின்றியவழிகளில் தங்கள் ஜீவநத்தை நடத்தும் முறைகளிலும் பழக்கும் பொருட்டாகும் இந்த இரண்டு காரியங்களும் இடரின்றி நடைபெறுதற்கு இவ்வாச்ரமம் ஆசார்யர்களும் மாணவர்களும் சேர்ந்து வாழும்படி ஸ்தான ஸௌகர்யங்கள் வாய்ந்த இடமாகும். ஆகவே இச் நான்கு அம்சங்களும் மேற்கண்ட விஷயங்களைக் குறிப்பனவாகிக் கிரமமாக ஒன்றன் பின்னொன்றாய்ச் சேர்க்கப்பட்டு "வைதிக தர்ம ஸங்க ஆச்ரமம்' என்ற ரூபத்தை அடைந்து இன்று பகவான் வாஸுதேவரது அநுக்கிரஹத்தால் இந்த ஆச்ரமத்துக்கு நாமதேயமாக அமைகிறது. இதனை அந்த பரமேச்வரனே பரிபூர்ண கிருபாகடாக்ஷத்துடன் அநுக்கிரஹித்து வெகுகாலம் இந்த புண்ய பூமியில் நிலைபெற நிற்கும்படி செய்து ஜீவராசிகள் பரமசிரேயஸை அடையும்படி அருள்புரிவாராக.

வைதிக தர்மதேவதைக்கு செய்யும் தொண்டு அந்தரங்ககைங்கர்யம் எனப்படும். அந்த கைங்கர்யத்தில் இடுபடும் புண்ய புருஷர்களது ஸங்கம் அந்தரங்க கைங்கர்ய ஸபை என்று சொல்லப்படும். இந்தஸபை ஒரு புருஷனது ஒரு உடல்போல் இருக்கிறது. ஸபைத்தலைவர் ஸ்ரீ பாதராஜர் சிரஸ்ஸ்தானத்தில் இருக்கிறார்கள் இந்தசபைக்கு வைதிக தர்ம ஸங்கம் ஆஸ்திக தர்ம ஸங்கம் என்ற இரண்டும் இரு புஜங்கள் போன்றன ப்ரும்மவீர்யத்தை தாங்கி நிற்பது வைதிக தர்ம ஸங்கம். க்ஷாத்ரவீர்யத்தைத்தாங்கி நிற்பது ஆஸ்திகதர்மஸங்கம். பாரததேசத்தின் மூலமாய் உலகிற்கும் சதுர்தசபுவனங்களுக்கும் ஸ்திதி ஹேதுவாய் இந்த அந்தரங்க கைங்கர்யஸபை ஸ்ரீபாதராஜர் அவர்கள் மூலம் வேதபுருஷனது அநுக்கிரஹத்தைத் தாங்கி நிற்கின்றன.

அந்தரங்க கைங்கர்ய சபை.

இந்தஸபை தேசஸங்கத்துக் காரியங்களில் இடுபட்டு நிற்கும் ஸமூகத்திற்கும் தர்மத்திற்கும் கைங்கர்யம் செய்ய ஆவல் உள்ள சிரத்தாளுக்களான கிருஹஸ்தர்கள் பிரதிக்ஞை எற்று இந்த ஸபையில் சேர வேண்டும். இவர்கள் ஸபையில் முக்ய அங்கத்தினர்கள். இவர்கள் தங்கள் காரியங்களில் உதவிசெய்ய அதிகாரிகளான சில வித்வான்களையும் சில லௌகீகர்களையும் கௌண அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ளுவார்கள். இந்தஸபைக்கு ஒருபரமஹம்ஸ பிக்ஷுசன்னியாசிகள் ஸ்ரீபாதராஜர் என்ற பட்டத்துடன் தலைவராக இருப்பார்கள். கைங்கர்ய பரர்களில் ஒருவர் ஸ்ரீகார்யம் என்ற பட்டத்துடன் ஸபைக்காரியங்களை கவனித்துவருவார். ஸ்ரீபாதகைங்கர்யம் என்ற பட்டத்துடன் பதினாறு வயதிற்கு மேற்பட்ட பிரம்மசாரிகள் ஸ்ரீ பாதராஜர் ஆக்ஞைக்குக்கீழ்ப்பட்டு ஸங்ககார்யங்களில் இடுபட்டு வருவார்கள்.

சிஷ்ட ஆஸ்திக மஹாஜனங்களுக்கு அறிவிப்பு:—

(1) தஞ்சாவூரில் மகா-ா-ா-ஸ்ரீ ஆர். ராதாகிருஷ்ண அய்யர் அவர்களால் நடத்தப்பட்டு வரும் ஆர்யமதபாடசாலை என்ற தர்மஸ்தாபனத்தை அந்தரங்க கைங்கர்ய ஸபை மிகவும் அபிமானிக்கிறது.

(2) செங்கல்பட்டு, விழுப்புரம், தஞ்சாவூர்ஜில்லா வடகுடி. இந்த இடங்களில் ப்ரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர் அவர்களால் அபிமானிக்கப்பட்டு நடந்துவரும் வேதபாட சாலைகளின் அபிவிருத்தியை அந்தரங்ககைங்கர்ய ஸபை கோருகிறது.

(3) செங்கல்பட்டு ஜில்லா திருக்கழுக்குன்றம் கிராமத்தில் ப்ரம்மஸ்ரீ யக்ஞேஸ்வரதீக்ஷிதர் அவர்களால் நடத்தப்பட்டு வரும் வேதபாடசாலைக்கு அந்தரங்க கைங்கர்யஸபையின் அபிமானிகள் எல்லோரும் மிகவும் உதவி செய்யப்பிரார்த்திக்கிறோம்.

(4) கலிதோஷத்தை நிவர்த்திசெய்து தர்மபுத்தியையும் பகவத் பக்தியையும் உண்டுபண்ணுவது பகவன் நாமாதான். ஆனபடியால் அந்த நாமஸித்தாந்தம் செய்து பாமர ஜனங்கள் யாவரும் உஜ்ஜீவிக்கும்படி செய்ய ஸ்ரீமத் போதேந்திராள் அவர்களது தஞ்சாவூர் ஜில்லா கோவிந்தபுறம் ஸ்ரீநாமஸித்தாந்த மடம் பிராமண ஸமூகத்தினர் யாவராலும் மிகவும் ஆதரிக்கத்தகுந்தது.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே!

(எஸ். கே. விஸ்வேச்வர சாஸ்திரிகள், மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர் கும்பகோணம்.)

காசிக்கு 15 மைல் தூரத்தில் ஒரு ஊரில் வாரன் (நாவித) ஜாதியான் ரங்கன் என்று ஒருவன் இருந்தான். அவன் தன்தொழிலில் தினம் 1, அல்லது 1½ ரூபாய் சுமாருக்குச் சம்பாதிப்பான். அன்றன்று கிடைப்பதில் முக்கால் பாகத்தை தான தர்மத்திற்கும், மீதியைச தன் செலவிற்கும் வைத்துக்கொள்வான். "கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்" என்று நாயனார் சொல்லியபடி இவன் ஒரு பெரிய பக்தன். தினம் 4 மணிதான் தூங்குவான். ஒவ்வொரு வாரம் லட்சம் நாம உச்சாரணத்திற்கு குறையாமல் செய்வான். வெளிவேஷம் ஒன்றும் இல்லை. ஆகையால் இவன் அந்தரங்க பக்தியும் தன்மையும் ஒருவருக்கும் தெரியாது. பெரியவர்கள் அப்படித்தான் நீறுபூத்த நெருப்புப்போல் இருப்பார்கள்.

அந்தஊரில் இருந்த பாடியா வகுப்பைச் சேர்ந்த கிருஷ்ணன், ரங்கனிடம் வேலை செய்துகொள்ள வந்தான். பாதியில் சீக்கிரம், நன்றாய்ச்செய், அப்பா, நான் இன்று கிளம்பி காசிபோய் கங்காஸ்நானம் செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்றான் கிருஷ்ணன். அப்போது ரங்கன் சற்று வேலையை நிறுத்தி, ஸ்வாமி நீங்கள் கங்காஸ்நானம் செய்கையில், உங்களுக்கு நேரே ஜலத்திற்கு மேல் கழுத்தை நீட்டி, வலது கையையும், ஒரு பெண் உருவம் காட்டினால், அந்தக்கையில் இந்தக்காலணாவை வையுங்கள், என் மாதாவாகிய கங்காபவானிக்கு, என்று சொல்லிக்கொண்டு, ஒரு காலணாவைக் கொடுத்தான். கிருஷ்ணன் வேலையான பிறகு கூலி கொடுத்து காலணாவையும் எடுத்துக்கொண்டு, தன் இடம் போய்க் காசிக்கு கிளம்பினான். கிளம்பும்போது, ரங்கன் கொடுத்த காலணா ஞாபகம் வர, என்ன கங்கையாவது தலையைக்காட்டிக்கையை நீட்டவாவது! பார்த்தால் ஜாதியில் தாழ்ந்தவன், அவன் சொன்னதோ வெகு ஆச்சர்யமாய் இருக்கிறது! நமக்கு ஒன்றும் விளங்கவில்லை யாரிடம் என்ன சக்தி இருக்குமோ! என்ன தெரிகிறது? அப்படி நடந்தால் தானே, காலணா கொடுக்கவேண்டும், என்று எண்ணிக்கொண்டு, கிளம்பிப் போய்விட்டான் காசிக்கு கிருஷ்ணன்.

மறுநாள் கங்கையில் ஸ்நானம் செய்ய இறங்கும்போது, ரங்கன் சொன்னது, ஞாபகம் வந்தது. சற்று விடியற்காலம், வேறு ஒருவரும் இல்லை. ஒரு முழுக்கு முழுகிக்கிளம்பினவுடனே, தன் எதிரே ஒரு உருவம் கையை நீட்டிக்கொண்டு இருப்பதைப் பார்த்து, கிருஷ்ணன் ஆச்சர்யத்தோடு, இடுப்பில் சொருகியிருந்த காசில், காலணாவை நீட்டின கையில் வைத்து, இன்னும் இரண்டு மூன்று முழுக்குகள் ஆனவுடன், கரையேறினான்.

ஏற ஆரம்பிக்கவே, பின் வரும் சப்தம் காதில் பட்டது. ஏ! கிருஷ்ணா! என்ன வெகு அவசரமாய்ப் போகிறாய். இந்தா, இப்பிரசாதத்னத, காலணா கொடுத்த என் பக்தனிடம், கங்கை கொடுத்தாள், என்று சொல்லிக்கொடு என்ற வார்த்தைகள் கேட்டன. உடனே இறங்கி கங்கையில் இருந்து, ஒரு மோதிரத்தைப் பெற்றுக்கொண்டுகரையேறி வீடுநோக்கி நடந்தான். இந்த ஆச்சர்ய ஸம்பவத்தில் அவன் மனம் அதிகம் ஈடுபடவில்லை. ஏனெனில் கிருஷ்ணன் "அன்பு அகத்தில்லாவுயிர் வாழ்க்கையன்".

போகும்போது கிருஷ்ணன் மனதில், அடியிற்குறித்த எண்ணங்கள் உண்டாயின. மோதிரத்தை நாவித ரங்கனிடம் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டுமாம்! என்ன உத்திரவு! கொடுக்காவிட்டாலோ? என் தலை போய் விடுமோ! மோதிரத்தைப்பார்த்தால் பெரியவைரங்கள் இழைத்தது. தகதக என்று பிரகாசிக்கிறது. கண்ணைக்கவருகிறது. விலை அதிகம் இருக்கும் என்றுதோன்றுகிறது. ஏன் இதைநாமே வைத்துக் கொள்ளலாகாது? எனக்குத்தான் இருக்கட்டுமே? இதை விற்று பணமாக்கினாலும் நாம் பதவியில் உயரலாம் என்று தோன்றுகிறது. இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டே "ஏகுமாம் எள்ளுமாம் கீழ்" என்று முனிவர் சொல்லியபடி கிருஷ்ணன் வீடுபோனான். தன்சாப்பாட்டு வேலையை சீக்கிரம் முடித்துக்கொண்டு, காசுக்கடைப்பக்கம் போய் மோதிரத்தைக்காட்டினான். கடைக்காரன் ஐயா! இது உமக்கு ஏது விற்பனைக்காகொண்டு வந்தீர்? அதிக விலைபெறுமே. என்னால் வாங்க முடியாது இன்னும் பெரிய கடைக்காரனிடம் காட்டும் என்றான். அப்படியே நாலைந்து பேரிடம் காட்ட, ஒவ்வொருவரும் இது 10, 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பெறுமே. இதை எங்களிடம் வந்து யார் வாங்குவார்கள்? ஜமீன்தார்கள் கோடீஸ்வரர்கள், வாங்கலாம் ஒரு வேளை. அவர்கள் இருக்குமிடம் கொண்டுபோனால் தக்க விலை கிடைக்கும் என்றார்.

அப்படிப்பட்டவர்கள் ஜாகா விசாரித்து தெரிந்து ஒரு ஜமீன்தாரிடம் போனான். அங்கே ஏஜண்டைப்பார்த்து ஒரு மோதிரம் விலைக்கு வேண்டுமா? என்றான். ஏஜண்டும் எஜமான் வாங்கினால் வாங்கலாம், காட்டி வருகிறேன் கொடு என்றார். ஜமீன்தாருக்கு இரண்டு மூன்று வருஷத்திற்கு முன் தான், கல்யாணம் ஆயிற்று. ஒருவயதில் ஆண்குழந்தையும்உண்டு. ஆனால்ஜமீன்தார் இப்போது ஜோர்பேர்வழிதான். ஏஜண்டு ஜமீன்தாரிடம் மோதிரத்தைக்காட்டவே, அவரும்பார்த்து ஆசைப்பட்டு வாங்கிவிடலாமே என்றார். கிருஷ்ணன் இருப்பிடம் விசாரித்துக் கொண்டு, அதற்கு ஏற்பட்டவிலை 25000 ரூபாய் நோட்டாய் கொடுத்து வாங்கி விட்டார் ஜமீன்தார். கிருஷ்ணன் மனமகிழ்ச்சியோடு, கிடைத்த தொகையை எடுத்துக் கொண்டு தன் வீடுபோய், தன் அந்தஸ்துக்குத்தக்க ஒரு வீடு எட்டு நாளில் வாங்கி அதில் அமர்ந்திருந்தான். தக்க பரிவாரங்கள் ஆள், சமயல்காரன் ஏற்படுத்திக் கொண்டான். "உள்ளத்தால் உள்ளலும் தீதே" என்றதேவர் வாக்கியம் கிருஷ்ணன் படிக்கவில்லை. ஜமீன்தார் தன் பழய மோதிரத்தை கழற்றி அதே விரலில் இந்தப் புது மோதிரத்தைப்போட்டுப் பார்த்தார். அளவெடுத்துச்செய்ததுபோல் இருந்தது. கைக்கு முன்புவிட அதிக அழகும், ஏற்பட்டதுபோல் தோன்றிற்று. மனைவியைக் கூப்பிட்டுக் காட்டினார். இது இப்போது வாங்கினதா? வெகு நன்றாய் இருக்கிறதே! கழற்றிப்பழய மோதிரத்தைப் போட்டுப் பாருங்கள்; இப்போது உங்கள் அழகையும், புதுமோதிரம் போட்டால் அப்போது ஏற்படும் அழகையும் பார்க்க, ஏவ்வளவோ வித்யாஸம் காண்கிறது. பழய மோதிரத்தைக் கழற்றி வைத்துவிட்டு, புதிதையே போட்டுக் கொள்ளுங்கள். இந்த ஒரு விரலில் போட்டது இவ்வளவு டால்வீசினால், இன்னும் மூன்று விரல்களுக்கு இதேமாதிரி வாங்கி அணிந்தால் எப்படி இருக்கும்? தாங்கள் வெளியே போகும்போது, நான்கு விரல்கள் மோதிரங்களில் இருந்து எவ்வளவு டால்வீசும் என்றாள் மனைவி.

(தொடரும்)

விருத்தாஜலம்.

இவ்வூரில் சின்னசேலம் சீதாராம சாஸ்திரிகள் வீட்டில் 7 வருஷகாலமாக ஸ்கந்தஷஷ்டி உத்ஸவமானது நடைபெற்று வருகிறது. அதிலும் இவ்வருஷம் அர்ப்பசி-மீ 15உ முதல் ஆரம்பித்து 21ம் தேதிவரையிலும் ஷஷ்டி உத்ஸவத்தில் விசேஷமாக வேத பாராயணமும் மஹன்யாஸமும் ஏகாதச ருத்ரமும், மஹாபிஷேக அலங்காராதிகளும், திரசதி ஸஹஸ்ரநாமார்ச்சனைகளும் ஜப ஹோமதர்ப்பணங்களும் பிரதி தினமும் பிராம்மண சமாராதனைகளும் பிரதி வருஷத்தைக்காட்டிலும் இவ்வருஷம் விசேஷமாக நடந்தேறியது. இவ்வூர் மஹாஜனங்கள் எல்லோரும் தரிசித்து ஆனந்தம் அடைந்ததுடன் மேலும் மேலும் தெய்வப்ரஸாத பாக்யத்தை அடைய வேணுமென்று ஸ்ரீ கலியாண குருநாதனைப் பிரார்த்திக்கின்றோம் ஷஷ்டி சாஸ்திகள் அவர்களுக்கு மேலும் மேலும் தெய்வபக்தி உண்டாகும்படி ஈச்வரனை பிரார்த்திக்கிறோம். ந. கி.

ஆழ்வார் திருநகரி கோயிலில் உபந்யாஸம்

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான எக்ஸிகூடிவ் ஆபீஸர் ஸ்ரீமான் எல்.ஆர். குருசாமி நாயுடுவின் வேண்டுகோளின் பேரில் சிரோமணி வித்வான் ஸ்ரீ ராமகிருஷ்ண அய்யங்காரால் தினசரி மாலை இரவு வேளைகளில் ஸ்ரீமத் கீதாகாலக்ஷேப ஸ்ரீ ராமாயண உபந்யாஸங்கள் செய்யப் பட்டு வருகின்றன. பலரும் சிரத்தையுடன் வந்து கேட்டு மகிழ்கின்றனர். இத்தொடர்ச்சி உபந்யாஸத்தை ஸ்ரீமத் ஆத்தான் ஸ்வாமிகள் தலைமை வகித்து ஆரம்பம் செய்து வைத்தார். (ந-கி)

சட்ட ஸபையில் சந்தடி

இந்தியா சட்ட ஸபையில் வரி மசோதாவை ஆதரித்து கவர்ன்மெண்ட் தரப்பில் ஸர். ராமஸாமி முதலியார் பேசியபோது காங்கிரஸ்காரர்களை தாக்கினார். உடனே காங்கிரஸ் கக்ஷி மெம்பர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள். இதன் காரணமாக பலத்தசந் யேற்பட்டு ஒரே கூச்சல் மயமாக இருந்தது. ஸர். முதலியார் பேச முடியாமல் நின்றார். எவ்வளவு தடை செய்தாலும் தாம் பேசித்தீரப் போவதாக அவர் சொல்ல வேண்டியதாயிற்று. நவீன கால ஜனநாயக நாகரீகம் இது தானா? ——

THE SANATANA DHARMA
OR
THE HINDU VIEW OF LIFE
BY
SRI SANKARACHARYA
of
SRI KANCHI KAMAKOTI PITHAM
Translated from the original in Tamil
BY
V. R. SUNDARARAMAN, M.A.
With a Foreword by
Sir MANMATHANATH MUKERJEE, Kt.
Ex-Chief Justice, High Court, Calcutta.
Price Rs. 1-8-0... Postage extra.
கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் கும்பகோணம்.

ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்திரம் வேதபாராயண தர்மம்.

இந்த பூமியிலுள்ள சமஸ்தமான மனுஷ்யர்களும் ஒரு தினம் வசித்த மாத்திரத்தினால் புண்ணியத்தை கொடுக்கக்கூடிய கைலாசத்திற்கு ஒப்பான ஸ்ரீ வாஞ்சியமென்ற க்ஷேத்திரமானது காவேரிதீரத்திற்கு சமீபத்திலும் நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து சுமார் 6-மைல் தூரத்திலும் உள்ளது இந்த க்ஷேத்திரவைபவத்தை தென்னிந்தியாவில் அறியாத ஆஸ்திகர்கள் அதிகமாயிருக்க முடியாது. ஸ்காந்தம் முதலான மகாபுராணங்களில் இந்த க்ஷேத்திர வைபவத்தை ஸ்ரீ வியாஸாச்சாரியாள் வர்ணித்திருப்பது சத்தியமென்பது க்ஷேத்திரத்திற்கு ஒரு தரம் சென்று குப்தகங்கை என்னும் தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து யமதீர்த்தத்திலும் ஸ்நாநம் செய்து மங்களாம்பிகா ஸமேத ஸ்ரீ வாஞ்சேஸ்வரரை தரிசித்தால் அப்பொழுதே புலப்படும். யமதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்கிறவர்களுக்கு யமபாதையே கிடையாதென்பது புராணங்கள் கூறியிருக்கிறது அதிலும் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் அந்த தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தால் பஞ்சமஹா பாதகங்களும் விலகிவிடும்.

இப்பொழுதும் கோடிக் கணக்கான ஜனங்கள் அந்தப் புண்ணிய காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு பானுவாரமும் வருகின்றனர். அப்பொழுது உத்ஸவமும் வருஷந்தோறும் நடந்து வருகிறது. ஷை உத்ஸவத்தில் வேதபாராயணம் சாதுக்களுக்கு சந்தர்ப்பணை இவைகளை நன்னிலம் பனங்குடியில் வசித்து யஜ்ஞ பரத்வாஜ மஹரிஷி போல் மகாதபஸ்வியான பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வந்தார். அவர்கள் தன்னுடைய 90-வது வயதில் சந்நியாஸம் செய்து கொண்டு சித்தியான பிறகு அவருடைய புத்திரர் பிரமஸ்ரீ. ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

இந்த விக்கிரமஸு கார்த்திகை மீ 14உ வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 10 நாள் பெரிய மஹோற்ச்சவத்தில் வேத பாராயணத்தையும் சந்தர்ப்பணையையும் ஷை தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். அனைவரும் உதவிபுரிய வேண்டியது அவச்யமாகும். வேதாத்தியயநம் பண்ணுகிற சாதுக்கள் குக்ஷிகளில் நமது அன்னம் சேர்ந்து ஜீர்ணமானால் நமது பாபங்கள் எல்லாம் ஜீர்ணமாகிவிடும் இந்தப் பெரிய தர்மத்தை தீக்ஷிதர் அவர்கள் ஒரு வாரம் பொருத்து செய்ய முடியாததால் சாதுக்கள் அக்ஷதமாகவோ அல்லது திரவ்யமாகவோ கொடுத்து உபகாரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனந்தராம தீக்ஷிதர்

டெல்லியில் ஸ்ரீராமாயண பிரவசனம்

புது டெல்லியில், காஞ்சிபுரம் ஸ்ரீநரஸிம்ம தேசிகாசார்ய ஸ்வாமியைக்கொண்டு ஸ்ரீராமாயணத்தைப்பல பிரிவுகளாக வகுத்து உபந்யாஸம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புதிய டெல்லி வாஸிகளான பல பிரபலஸ்தர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

16-11-40 முதல் ஆரம்பித்து 20-12-40 வரை ஒரு மாத காலத்தில் ஸ்ரீ ராமாயணம் முழுவதும் உபந்யஸிக்கப்படுமென்று டில்லி வாஸிகள் சிலர் நமக்கு அறிவிக்கிறார்கள்.

சேலத்தில்

ஸ்ரீமத் ராமாயண, பாகவத ப்ரவசனம்

சேலம் 2வது அக்கிரஹாரத்தில், சேங்காலிபுரம், வைதிக தர்ம ஸம்ரக்ஷக, பிரவசன துரீண பிரம்மஸ்ரீ அனந்த ராம தீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீமத் பாகவத பக்ஷாஹமும், ஸ்ரீமத் ராமாயண நவாஹமும், மிகவும் நன்றாக உபன்யசிக்கப்பட்டது,

பிரதி தினமும் 1000 ஜனங்கள் வந்து சிரவணம் செய்ததோடு முக்கியமாக மகா-ா-ஸ்ரீ. ஆர். எம். சுந்திரம் ஐ.ஸி எஸ்.கலெக்டர், சேலம் அவர்களும் ஜில்லா ஜட்ஜ் மகாா-ா:ஸ்ரீ சந்திரசேகரய்யர் அவர்களும் ரிடயர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் மகாா-ஸ்ரீ சுந்திரம் செட்டியார் அவர்களும் ரிடயர்ட் ஜட்ஜ் டி. சுந்தரமய்யர் அவர்களும் சிரவணம் செய்து ஆனந்தமடைந்தது குறிப்பிடத்தக்கது.

15—11—50 சுக்கிரவாரத்தில் ஸ்ரீராம பட்டாபிஷேகம் மிகவும் நன்றாக நடைபெற்றது. அன்று தீக்ஷிதர் அவர்களுக்கு எல்லோரும் சன்மானம் செய்து கௌரவித்ததோடு ஸ்ரீ ஆர். எம். சுந்திரம ஐ. ஸி எஸ். கலெக்டர் அவர்களும், ஸ்ரீ சந்திரசேகரய்யர் ஜில்லா ஜட்ஜ் அவர்களும், ஸ்ரீ சுந்திரம் செட்டியார் ரிடையர்டு ஹைகோர்ட் ஜட்ஜ் அவர்களும், ஸ்ரீ டி. சுந்திரமய்யர் ரிடயர்ட் டிஸ்டிரிக்ட் செஷன்ஸ் ஜட்ஜ் அவர்களும் தீக்ஷதர் அவர்களுடைய குணங்களையும் உபந்யாஸத்தின் பெருமையையும் அவர்களுடைய உபந்யாஸத்தால் சத்வாஸனை உண்டாகி அஸத்வாஸனை போனதென்று நாங்களே காணுகிறோம் என்றும் இவர்களுடைய உபந்யாஸம் இங்கு அடிக்கடி நடந்து கொண்டிருந்தால் எல்லோரும் தார்மிகர்கள் ஆவார்களென்பது சந்தேகமில்லையென்றும் எல்லோரும் 15 நிமிஷம் தமிழில் எளிய நடையில் சபையில் பேசி பிறகு ஆங்கிலத்தில் நான்கு பிரமுகர்களும் தீக்ஷதர் அவர்களுக்கு ஓர் உபசாரப் பத்திரம் படித்து கொடுத்தது எல்லா பக்தர்களுக்கும் ஆனந்தத்தை உண்டுபண்ணியது பிறகு தீக்ஷதர் அவர்கள் மழை, குளிர், முதலிய தொந்தரவுகள் இருந்தபோதிலும் கலெக்டர் முதலிய பிரமுகர்களும், சேலம்வாஸிகளும் வந்து சிரவணம் செய்ததற்கு ஸ்ரீபகவான் சகல மங்களங்களையும் கொடுக்கும்படி பிரார்த்திப்பதாக வெகு அழகாக பேசி முடித்தார்கள்.

கார்த்திகை மீ 1உ முதல் ஸ்ரீ டாக்டர் பி. எஸ். ராமஸ்வாமி அய்யர் எக்ஸ்ரே டாக்டர் அவர்கள் கிரஹத்தில் ஸ்ரீமத் பாகவத உபந்யாஸம் ஆரம்பித்து செய்து வருகின்றனர். அங்கும் வெகு ஆஸ்திகர்கள் வந்து சிரவணம் செய்கின்றனர். கார்த்திகைமீ 12உ ஸ்ரீமத்பாகவதஸமாப்தி நடக்கப்போகிறது. முக்யமாய்சேலத்திற்கு தீக்ஷதர் அவர்களை வரவழைத்த மகா-ா-ஸ்ரீ ரிடயர்ட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் சுந்தரமய்யரவர்களை இங்குள்ள ஆஸ்திகர்கள் அனைவரும் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது

டி. எஸ். மணி ஐயர்

திருக்கோடிகாவல்

முத்ராதிகாரி பிரசாரம்

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமச்சங்கர பகவத்பாள் அவர்கள் ஆஞ்ஞாபிரகாரம் இவ்வூரில் சென்ற சில காலமாக ஒவ்வொரு ஏகாதசியிலும் உபன்யாஸங்கள் நடந்து வருகின்றன. ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் வந்திருந்து நடத்தி வருகிறார்கள் சென்ற அர்பசி-மீ 11-உ ஏகாதசி என்று இவ்வூர் வித்வான் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் ஸந்தியோபாஸ்தியின் பிரமாணங்களும் அதை அனுஷ்டிக்கவேண்டிய ஆவசியத்தையும், அர்க்யப்ரதாநம், அபித்யானம் காயத்ரிஜபம், உபஸ்தானம், என்கிறப்ரதான அம்சங்களும், அவைகளுக்கு ஸாதனமான அவாந்தரகர்மாக்களும, உபாஸ்தியின் பலாவாப்தியும், அந்யதாப்ரத்யவாயமும், விஸ்தாரமாக ச்ருதி ஸ்மிருதி மாணவசநங்களுடன் ச்ரோதாக்களுக்கு நன்கு புரியுமாறு தெளிவாக உபன்யஸிக்கப்பட்டது. அன்றையதினம் வந்திருந்த ஷை ஆஸ்திக மகாஜனங்களின் அபிப்ராயப்படி, ஸந்தியாவந்தனம் பூராவும் அடுத்த (அற்பிசி) ஏகாதசிமுதல் ஆறு நாட்களில் ஆசமனம், பிராணாயாமம், மார்ஜனம் மந்த்ராசமனம், புனர்மார்ஜனம், அர்க்யம், அபித்யானம், காயத்ரிஹ்ருதயம், காயத்ரீஜபம், உபஸ்தானம், திக்குவந்தனாதி அபிவாதனார்த்தம் மந்த்ரார்த்த விசாரத்துடன் வ்யாஹ்ருதிகளோடு காயத்ரீ அர்த்த விசாரமும், ஸப்ரகாரமாய் ஷை ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களாலும் கும்பகோணம் அத்வைத ஸபா வித்வான் செறுமுடி ஸ்ரீ ராமமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களாலும் ஆஸ்திகர்கள் அனைவரும் ஆனந்திக்கும்படி ஒவ்வொரு நாளும் முறையே நன்கு உபன்யஸிக்கப்பட்டது. ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து ச்ரவணம் பண்ணி ஆனந்தித்ததானது அவரவர்களுடையச்ரத்தையை நன்கு வெளிக்காட்டிவது. மேன்மேலும் ஸ்ரீ பரமாசார்யாளுடைய அனுக்ரஹத்தினால் அநேக உத்க்ருஷ்டமான உபன்யாஸங்கள் நடைபெறுமென்றும் எதிர்பாக்கப்படுகிறது.

ந. நி

திருவேடகம் வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கம்.

பௌர்ணமி சபை.

இவ்வூர் ஏடகநாத சுவாமிக்கு 14—11—40-ல் அன்னாபிஷேகமும் அம்பாளுக்கு சந்தனலேபனாலங்காரமும் இவ்வூர் வைதீகாளுடைய முயற்சியின்பேரில் அநேக பிராம்மண பிரபுக்களுடைய திரவிய சகாயத்தைக்கொண்டு வெகு சிறப்பாக நடைபெற்றது. அதுசமயம் வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய சங்கத்தின் சார்பாக ராத்திரி 8-மணியிலிருந்து 12-வரை, அம்பாள் சந்நதியில், 300 ஜனங்கள் கூடிய சபையில் சோழவந்தான் பிரும்மஸ்ரீ சங்கர சாஸ்திரியவர்களால் பார்வதி கல்யாணம் என்ற திவ்ய சரித்திரமானது மிகரஸமாய் நடத்தப்பட்டது. பிறகு தீபாராதனை, முதலியது நடைபெற்று, வந்த பக்த ஜனங்களுக்கு சந்தனம் பலம் முதலிய பிரசாதங்கள் வழங்கப்பெற்று ஷை அன்னாபிஷேக உத்ஸவமானது மிக விமரிசையாய் நடந்தேறியது. இதுபோல் பிரதி வருஷம் தோறும் ஸ்ரீமான்களான பிரபுக்கள் ஷை தர்மத்தை நடத்தி வைப்பார்கள் என்று பிரார்த்திக்கப்படுகிறது.

A. கிருஷ்ணஸாமி கனபாடிகள்,
காரியதரிசி.

Printed by S. Kalyansundarm, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopladesikachariar, and S, Kalyanasundaram.